NEW HOLLAND AGRICULTURE

# அக்ரி இன்டெக்ஸ் 2019 பொருட்காட்சியில் பார்வையாளர்களை அசத்திய நியூஹாலண்ட் அக்ரிகல்ச்சர்

*தமிழ்நாட்டில் ஜூலை 12 முதல் 15 வரை நடைபெற்ற அக்ரி இன்டெக்ஸ் 2019 விவசாய பொருட்காட்சியில் டிராக்டர்கள், பேலர்கள், ஹார்வெஸ்ட்டர்கள், பிளான்ட்டர்கள், லோடர்கள் எனப் பலதரப்பட்ட தயாரிப்புக்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.*

**கோயம்புத்தூர், தமிழ்நாடு, xx ஜூலை 2019**

CNH INDUSTRIAL

PRESS RELEASE

உலகின் முன்னணி வேளாண் சாதனங்கள் தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றான நியூஹாலண்ட் அக்ரிகல்ச்சர் தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் நகரில் உள்ள கொடிசியா வர்த்தகப் பொருட்காட்சி அரங்கில் நடைபெற்ற 19-வது அக்ரி இன்டெக்ஸ் 2019 பொருட்காட்சியில் பங்கெடுத்தது.

தென்னிந்தியாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான முதன்மை தொழிற்சங்கங்களில் ஒன்றான கொடிசியா இந்த அக்ரி இன்டெக்ஸ் பொருட்காட்சியை நடத்தியது. தென்னிந்தியாவில் நடைபெறும் மிகப்பெரிய வேளாண் வர்த்தகப் பொருட்காட்சிகளில் ஒன்றான இதில் மண் இல்லாமல் விவசாயம் செய்தல், நீடித்துத் தாக்குப் பிடிக்கும் விவசாய நடைமுறைகள், இயந்திர முறை விவசாயம் போன்றவை நேரடியாகச் செயல் விளக்கம் மூலம் செய்து காட்டப்பட்டன. பல்வேறு இந்திய மாநிலங்களில் இருந்தும், அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல், சீனா, ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி, ஸ்வீடன், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்தும் சுமார் 96,000 பார்வையாளர்கள் இதில் பங்கேற்றனர்.

நியூஹாலண்ட் நிறுவனம் மிகவும் பிரபலமான 9010 (4WD) மற்றும் புளூ ஸீரிஸ் பேலருடன் கூடிய எக்ஸெல் 4710 (4WD) டிராக்டர்கள், ஒற்றை வரிசை தீவன அறுவடை எந்திரம் FC 200 உடன் கூடிய 3600-TX டிராக்டர், லோடருடன் கூடிய 6010 (4WD) டிராக்டர், TC5.30 கம்பைன் ஹார்வெஸ்ட்டர், PP நிமாட்டிக் பிளான்ட்டர் மற்றும் புளூ ஸீரிஸ் பேலர், கூடவே நியூஹாலண்டின் சகோதர நிறுவனமான கேஸ் IH தயாரித்த A4000 கரும்பு ஹார்வெஸ்ட்டர் உள்ளிட்ட தனது விரிவான விவசாய இயந்திரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிலவற்றைக் காட்சிக்கு வைத்திருந்தது.

கேரள மாநில நீர்வள அமைச்சர் மாண்புமிகு திரு கே கிருஷ்ணமூர்த்தியும், கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சிக் கழகத்தின் டீன் திரு மனோகர் ஜேசுதாசும் நியூ ஹாலன்ட் அரங்கிற்கு வருகை தந்து, நியூஹாலண்ட் டிராக்டர்கள் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு சாதனங்களின் மிகவும் முன்னேறிய டெக்னாலஜியை ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

நிகழ்ச்சியில் பேசிய தமிழ்நாடு & கேரளா வட்டார விற்பனை மேலாளர் திரு டி ஸ்ரீனிவாசன், ‘‘எங்களுடைய வாக்குறுதியை மெய்ப்பிக்கும் வகையில், இந்திய விவசாயிகளுக்கு தொழில்நுட்ப ரீதியில் மிகவும் மேம்பட்ட டிராக்டர்களையும், முழுமையான இயந்திர முறை விவசாய சாதனங்களையும் தொடர்ந்து அறிமுகப்படுத்தி வருகிறோம். நியூஹாலண்ட் பல அம்சங்கள் நிறைந்த முற்றிலும் சீலிடப்பட்ட எக்ஸெல் 4710 போர்ட்டல் ஆக்ஸில் நான்கு சக்கர டிரைவ் டிராக்டர்களை கேரளாவின் சேற்று உழவிற்காக அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த மாடல் டிராக்டர் எரிபொருள் சிக்கனத்துடன் கூடியது. ஒப்பற்ற பாதுகாப்பையும், சௌகரியத்தையும் வழங்கக்கூடியது. நியூஹாலண்ட் டிராக்டர்கள் பலவகைத் திறன் மிக்கவை. நிலத்தைப் பண்படுத்துவதில் இருந்து அறுவடைக்குப் பிந்தைய வேலைகள் வரை எல்லாவிதமான இயந்திரமுறை விவசாயத்தின் முழுத் தேவைகளையும் நிறைவேற்றக்கூடியவை,'' என்று கூறினார்.

**தமிழ்நாட்டில் நியூஹாலண்ட்**

தற்போது தமிழ்நாட்டில் வளர்ந்துவரும் டிராக்டர் மார்க்கெட்டில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 25000 டிராக்டர்கள் விற்பனையாகின்றன. தமிழகத்தில் தற்போது 17 ஆயிரத்துக்கும் அதிகமான நியூஹாலண்ட் டிராக்டர்கள் இயங்கிக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் 35-க்கும் அதிகமான கஸ்டமர் டச் பாயின்ட்டுகளை நிறுவி ஒவ்வொரு விவசாயியையும் சென்றடையும் வகையில் இந்த நிறுவனம் வளர்ந்து வருகிறது.

மேலும், விவசாயிகளுக்கு உதவிட, 1800-419-0124 என்னும் கட்டணமில்லா தொலைபேசி எண்ணுடன் பிரத்யேக ஹெல்ப்லைன் ஒன்றை கம்பெனி ஏற்படுத்தியுள்ளது. இது தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி யுடன் 6 வட்டார மொழிகளில் செயல்படுகிறது.

[ENDS]

*நியூஹாலண்ட் அக்ரிகல்ச்சர் நிறுவனத்தின் பெயரும் புகழும் எமது வாடிக்கையாளர்கள், பணப்பயிர் சாகுபடி செய்வோர், கால்நடை வளர்ப்போர், கான்ட்ராக்டர்கள், பழத்தோட்டங்கள், அல்லது நிலத்தைப் பண்படுத்தும் தொழில்முறையாளர்களுக்குக் கிடைக்கும் வெற்றியின் அடிப்படையில் அமைந்துள்ளன. டிராக்டர்களில் இருந்து ஹார்வெஸ்ட்டிங் இயந்திரங்கள், பொருட்களைக் கையாளும் சாதனங்கள் வரை முழுமையான சாதனங்கள் என்று புத்தாக்கமான இயந்திரங்கள் மற்றும் வேளாண்மையில் ஸ்பெஷலிஸ்ட்டான நிறுவனத்தின் தேவைகளுக்கு ஏற்ற நிதிச் சேவைகள் உள்பட பலவிதமான சேவைகளை நாங்கள் வழங்குகிறோம். தொழில்முறை நிபுணத்துவம் வாய்ந்த உலகளாவிய டீலர் நெட்வொர்க்கும், உன்னதம் காண்பதில் நியூ ஹாலன்ட் கொண்டிருக்கும் கடமைப் பற்றும் சேர்ந்து வாடிக்கையாளர் ஒவ்வொருவருக்கும் நிச்சயமான ஓர் அனுபவத்தைத் தருகிறது. மேலும் அதிக விவரங்களுக்கு வருக www.newholland.com*

*நியூஹாலண்ட் அக்ரிகல்ச்சர் என்பது மூலதனப் பொருட்கள் பிரிவில் உலகளாவிய நிலையில் நன்கு நிலைநாட்டப்பட்ட தொழில் அனுபவத்துடன் கூடிய சிஎன்எச் இண்டஸ்டிரியல் என்.வி (NYSE: CNHI/MI: CNHI) நிறுவனத்தின் ஒரு பிராண்டு ஆகும். உலகெங்கும் இது செயல்பட்டு பலரகமான பொருட்களைத் தயாரித்து வழங்குகிறது. சிஎன்எச் இன்டஸ்டிரியல் பற்றிய மேலதிகத் தகவல்களை www.cnhindustrial.com என்னும் முகவரியில் காணலாம்.*

பத்திரிகைத் தொடர்பாளர்:
புனீத் ஜெயின்
நியூஹாலண்ட் செய்தித் தொடர்பு, இந்தியா
மின்னஞ்சல்: Puneet.jain@cnhind.com
போன்: +91 9205484518